

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 24-10-2025

# ‘தினமலர்’ சொல்லும் செய்தி!

**“திராவிட மாடல் ஆட்சியில் வறுமை இல்லை, பட்டினிச் சாவு இல்லை, பண வீக்கம் இல்லை, சாதி மோதல்கள் இல்லை, மதக் கலவரங்கள் இல்லை, பெரிய வன்முறை இல்லை இப்படி இல்லை, இல்லை, இல்லை என்ற சூழ்நிலையை உருவாக்கி காட்டி இருக்கிறோம்”** என்று சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொல்லி இருந்தார்கள். அதற்கு ஆதாரமாக ஒரு கட்டுரையை ‘தினமலர்’ நாளிதழ் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசும் போது, தனிப்பட்ட விரோத வன்முறைகள், கொலைகளை சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாக சித்தரிக்க முயன்றார். ‘தனிப்பட்ட முன்விரோதம் காரண மான கொலைகளை சட்டம் ஒழுங்கு மோசமாகச் சொல்ல முடியாது’ என்று மாண்புமிகு முதல் அமைச்சர் விளக்கம் அளித்தார். ஆனாலும் பழனிசாமி சொன்னதையே சொல்லி வருகிறார்.

16.10.2025 நாளிட்ட ‘தினமலர்’ நாளிதழ் ஒரு கட்டுரையை வெளியிட்டு இருக்கிறது. ‘தமிழ்நாட்டில் குடும்பச் சண்டை காரணமாகத் தான் அதிக மான கொலைகள் நடக்கிறது’ என்பதை ஆதாரத்துடன் எழுதி இருக்கிறது ‘தினமலர்’.

2021,22,23,24,25 ஆண்டுகளில் நடைபெற்ற கொலைகளுக்கான காரணங்களைத் தொகுத்து எழுதி இருக்கிறது அந்த நாளிதழ். மதம் சார்ந்த கொலைகள் 2022,2025 ஆகிய ஆண்டுகளில் ஒன்று கூட இல்லை. 2023,2024 ஆகிய ஆண்டுகளில் ஒரு கொலை நடந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் இரண்டு கொலைகள் நடந்துள்ளது.

சாதித் தகராறு அடிப்படையில் 5,4,3,4,0 ஆகிய எண்ணிக்கையில் (ஒவ்வொரு ஆண்டு வரிசைப்படி!) நடந்துள்ளன. சாதி முன் விரோதமாக 4,3,5,3,0 ஆகிய எண்ணிக்கையில் நடந்துள்ளன. அரசியல் ரீதியாக 2,4,1,0,0 என்ற அளவில் நடந்துள்ளன.

தீவிரவாத அமைப்புகள் ரீதியானவை இந்த ஐந்து ஆண்டுகளில் ஒன்று கூட நடக்கவில்லை. அதேபோல் பயங்கரவாத அமைப்புகள் ரீதியான சம்பவங்கள் ஐந்து ஆண்டுகளில் ஒன்று கூட நடக்கவில்லை.

மற்றபடி காதல் விவகாரம், தகாத உறவு, குடும்பச் சண்டைகள், பண விவகாரம், சொத்துப் பிரச்சினை, முன் விரோதம், வாய்த் தகராறு போன்றவைதான் அதிகப்படியான கொலைகளுக்கு காரணமாக அமைந்துள்ளன. இதுகுறித்த தகவல்களை விரிவாக வெளியிட்டுள்ளது ‘தினமலர்’.

**சாதி தகராறு, மதத்தகராறு, தீவிரவாதம், பயங்கரவாதம் ஆகிய வன்முறைகள், கூட்டுத் தகராறுகள், கூட்டுச் சம்பவங்களைத் தான் சட்டம் ஒழுங்கின் சீரழிவுகளாகச் சொல்ல முடியும். அந்த வகையில் விரல் ஏதும் சொல்லிக் காட்டும் படி தமிழ்நாட்டில் நடைபெறவில்லை என்பதையே அந்த நாளிதழின் கட்டுரை எடுத்துச் சொல்கிறது.**

**சட்டம் ஒழுங்கைக் காப்பதில் தமிழ்நாடு அரசு உறுதியாக இருக்கிறது என்பதற்கு இந்தச் செய்தி ஒரு சான்று ஆகும்.**

அனைத்துச் சம்பவங்களிலும் காவல்துறை சுதந்திரமாகச் செயல்பட்டு, குற்றவாளிகள் யாராக இருந்தாலும், சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. எந்தவிதமான பாரபட்சமும் காட்டப்படுவதில்லை. குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள், கூலிப்படையினர் எனக் கருதப்படு வோரின் நடவடிக்கைகள் தொடர்ந்து உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு முன்னெச்சரிக்கை கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழும் கைது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2017-2020 ஆம் ஆண்டில், கொலை வழக்குகள் ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகரித்து வந்தன. இது படிப்படியாக 2021 முதல் குறைந்து வருகிறது. 2024 ஆம் ஆண்டில் மிகக் குறைந்த கொலை வழக்குகள் பதிவாகியுள்ளன. கடந்த 6 ஆண்டுகளில் மிகக் குறைந்த ரவுடி கொலைகள் பதிவாகியுள்ளன. சாதி மற்றும் பழிவாங்கும் நோக்கம் கொண்ட கொலைகள் குறைந்துள்ளன. **காவல்துறையினர் மேற்கொண்ட பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக, 2023 ஆம் ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கொலைகள், காய வழக்குகள் குற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளன.** கொலை வழக்குகளில் ரவுடிகளைக் கட்டுப்படுத்த காவல் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

சரித்திரப் பதிவு குற்றவாளிகளில் பெரும்பாலானவர்கள் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைதானது இதற்கு முக்கியக் காரணம் ஆகும். சிறைக்குள் இவர்கள் கடுமையாக கண்காணிக்கப்படுகிறார்கள். ரவுடிகளுக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள் கடுமையாக்கப்பட்டுள்ளது. இதனால் ரவுடிகளுக்குள் பழிவாங்குதல் குறைந்து வருகிறது.

காவல் துறைக்கு கடுமையான உத்தரவுகளை தொடர்ந்து பிறப்பித்து வந்துள்ளார் முதல் அமைச்சர்.

**“குற்றங்களைக் குறைக்கும் துறையாக மட்டும் இல்லாமல் குற்றங்களைத் தடுக்கும் துறையாகச் செயல்பட வேண்டும். குற்றங்கள் நடக்காத மாநிலமாக போதைப் பொருள் நடமாட்டம் இல்லாத மாநிலமாக பாலியல் குற்றம் இல்லா மாநிலமாக நமது மாநிலம் உருவாக வேண்டும். குற்றங்கள் எங்கும் யாராலும் நடக்கக் கூடாது**, மீறி நடந்தால் உடனடியாக குற்றவாளி கைது செய்யப்பட்டாக வேண்டும். சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு உடனடியாக தண்டனை பெற்றுத் தந்தாக வேண்டும்.

இத்தகைய உறுதிமொழியை நான் எடுத்தால் போதாது, காவல்துறையின் உயரதிகாரிகள் எடுத்தால் போதாது, ஒவ்வொரு காவலரும் எடுத்தாக வேண்டும். எனது காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் எந்த வகைப்பட்ட குற்றமும் நடக்கவில்லை நடக்க விடமாட்டேன் என்று ஒரு காவலர் முடிவெடுத்துவிட்டால் குற்றங்கள் பூஜ்யத்துக்கு வந்துவிடும் என்பதில் சந்தேகமே இல்லை. மனித வளர்ச்சியின் அனைத்துக் குறியீடுகளிலும் முன்னணி மாநிலமாக இருக்கும் தமிழ்நாடு குற்றச் சம்பவங்களில் பூஜ்யமாக இருந்தால்தான் அது நமக்குப் பெருமை.

இதில் பூஜ்யம் தான் வாங்க 100 விழுக்காடு அர்ப்பணிப்புடன் அனைத்துக் காவலர்களும் பணியாற்ற வேண்டும்” என்று காவல்துறைக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் வேண்டுகோளாக மட்டுமல்ல; உத்தரவாக ஆணையாகப் பிறப்பித்துள்ளார்.

அப்படியே காவல் துறையும் செயல்பட்டு வருகிறது.

அதனால்தான் மாநிலம் அமைதி மிகு மாநிலமாக இருக்கிறது. அதனால்தான் வளர்ச்சி மிகு மாநிலமாகவும் இருக்கிறது.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், செய்யாறு மற்றும் உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகங்களையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.10.2025) முகாம் அலுவலகத்தில், தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் பெ. பழனியப்பன் குடும்பத்தினருடன் சந்தித்து, தனது மகன் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் திடீராய்வு மேற்கொண்டார். பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் உடன் உள்ளார்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் திடீராய்வு மேற்கொண்டு, 1913 என்ற உதவி எண்ணிற்கு தொடர்பு கொண்ட பொதுமக்களிடம் புகார் குறித்த விவரங்களை தானே கேட்டறிந்தார்.

### வடகிழக்குப் பருவமழையையொட்டி – சென்னை மாநகராட்சி அலுவலக

# கட்டுப்பாட்டு மையத்தில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

## சீரமைப்புப் பணிகளை முடுக்கி விட்டார்!

**சென்னை, அக். 24 -**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, வடகிழக்குப் பருவமழையையொட்டி பொதுமக்கள் அளித்த புகார்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நேரில் பார்வையிட்டு, சீரமைப்புப் பணிகளை முடுக்கி விட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில், பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகார்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை கணினிகளில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள எல்.ஈ.டி திரைகள் மூலமாக நகரின் பல்வேறு இடங்களில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து சீராக நடைபெறுவதையும், மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு கால்வாய்களில் மழை நீர் தடையின்றி செல்வதையும், முகத்து வாரத்தில் நீர் தடையின்றி கடலுக்கு செல்வதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

1913 என்ற உதவி எண்ணிற்கு பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களை தானே நேரடியாக கேட்டறிந்ததுடன் உதவி எண்ணில் தன்னிடம் தொடர்பு கொண்ட புகார்களின் மீது மேற்கொண்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் நுங்கம்பாக்கம் ஜெய்சங்கர் சாலை பகுதிக்கு நேரில் சென்று தேங்கிய மழை நீர் அகற்றப் பட்டதை நேரில் பார்வையிட்டு, சீரமைப்பு பணிகளை முடுக்கி விட்டார்.

தொடர்ந்து 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அண்மையில் தான் தொடங்கி வைத்த விருகம்பாக்கம் கால்வாய் சீரமைப்பு பணிகளின் காரணமாக நெற்குன்றம் பகுதியில் நீர் சீராக செல்வதை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, பணியின் முன்னேற்றம் குறித்து மாநகராட்சி அலுவலர்களிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் பெருங்குடி மண்டலம் செம்மொழி சாலை பகுதியில் சென்னை மெட்ரோ இரயில் திட்டப்பணிகள் நடைபெற்று வரும் மேடவாக்கம் சந்திப்பு பகுதி, 191 வது வார்டு பகத்சிங் தெரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்காமல் உடனுக்குடன் மோட்டார் பம்ப் உதவியுடன் நீரை அகற்றும் பணிகளை மேற்கொள்ளவும், நிவாரண மையங்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறும், அலுவலர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மழையின் தீவிரத்தை தொடர்ந்து கண்காணித்து சீரமைப்பு பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், தெற்கு வட்டார துணை ஆணையர் அஃதாப் ரசூல். மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.